கர்த்தருக்கு புதுப்பாட்டைப் பாடுங்கள்

Sing to the Lord a New Song

ஆல்பம் 24 பாடல் 4 Album 24 Song 4



2007 December

Priorities

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள் 30 APR '07

3 Monday

Wk 49 • 337-028

96 சங்கீதம்

கர்த்தருக்கு புதுப்பாட்டைப் பாடுங்கள்
பூமியின் இசைகளே பாடுங்கள்
எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள்
கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்தரியுங்கள்

நாளுக்கு நாள் கர்த்தரின் இரட்சிப்பை
சுவிசேஷமாய் அறிவியுங்கள்
ஜனத்திற்கு கர்த்தரின் மகிமையை உணர்த்துங்கள்
கர்த்தர் செய்த அதிசயங்களை விவரித்துச் சொல்லுங்கள்

(கர்த்தருக்கு)

கர்த்தர் பெரியவர் அவரே நல்லவர்
எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர்
கர்த்தர் தானே வானங்களைப் படைத்தவர்
மற்ற தேவர்களோ விக்கிரகங்கள் தானே

(கர்த்தருக்கு)

மகிமையும் கனமும் கர்த்தர் சமூகத்தில்
வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்தில்
பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரை வணங்குங்கள்
பூலோகத்தாரே கர்த்தருக்கே நடுங்குங்கள்

(கர்த்தருக்கு)

வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பாகி
சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குகின்றது
நாடும் அதில்யாவும் கர்த்தருக்காய் களிகூரட்டும்
கர்த்தருக்கு இன்பமாய் காட்டுமரங்களும் கெம்பீரிக்கும்

(கர்த்தருக்கு)

ஜனங்களின் வம்சங்களே மகிமை செலுத்துங்கள்
கர்த்தருக்கே வல்லமையையும் செலுத்துங்கள்
பூமியை நியாயந்தீர்க்க கர்த்தர் வருகிறார்
ஜனங்களை சத்தியத்தால் நியாயந்தீர்ப்பார்

(கர்த்தருக்கு)

KJC-DNN



Sing to the Lord a New Song

Album 24 Song 4